Cambridge Assessment International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2022**

INSERT **1 hour 30 minutes**

**INFORMATION**

- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Any blank pages are indicated.

KI 303347/3
© UCLES 2022

[Turn over

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–13** on the question paper.

ஒரு வீட்டில் பெற்றோர், இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தனர். குழந்தைகள் வளர்ந்து தொழிலுக்காகப் பெற்றோரைப் பிரிந்து வெளியூரில் தங்கி இருந்தனர். பெற்றோர்கள் பெரிய வீட்டில் தனித்து இருந்த காரணத்தினால், வீட்டின் நிர்வாக வேலைகள் அதிகரித்தன.

இரண்டு அடுக்குகளைக் கொண்ட அந்த வீட்டில், விசாலமான இரண்டு பெரிய இருக்கை அறைகள், நான்கு படுக்கை அறைகள், படிக்கும் அறை, சமையல் அறையோடு கூடிய உணவருந்தும் அறை என்பன இருந்தன.

வீடு பெரியதாக இருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். அதனால், அதை விடுதியாக மாற்றினார்கள். பெற்றோர் எட்டு மாதத்திற்குப் பிறகு ஒரு சிறிய வீட்டிற்கு மாறிப் போனார்கள். இந்த வீட்டில் ஒரு இருக்கை அறை, ஒரு சமையல் அறை மற்றும் இரண்டு சிறிய படுக்கை அறைகள் இருந்தன. அவர்களுடைய குழந்தைகள் அல்லது வேறு யாராவது வந்தாலும் செளகரியமாக இருக்கும் என்று இரண்டு அறைகளுடன் அந்த வீட்டை வாங்கினார்கள். அவர்களுடைய தற்போதைய வீடு முன்னால் வீட்டை விட சிறியதாக இருந்தது.

வீடு வாங்கி தமக்கு ஏற்றபடி சரிப்படுத்துவதற்கு பல நாட்கள் அவர்களுக்கு ஆனது. தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, பெரிய படுக்கையறைத் தளபாடங்கள் போன்றவற்றை விற்றார்கள். புத்தகங்கள், பாத்திரங்கள், உடைகள் போன்ற பொருட்களை அயலவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து விட்டார்கள்.

விடுமுறைக் காலத்தில் அவர்களுடைய குழந்தைகள் பெற்றொரைப் பார்க்க வருவார்கள். அப்போதெல்லாம் அந்த வீடு சிறியதாக இருப்பதாகக் கருதினார்கள். குறுகிய காலம் தங்கியிருந்த காரணத்தினால் அவர்களால் சமாளிக்கக் கூடியதாக இருந்தது. இருப்பினும், பிள்ளைகளும் பெற்றோர்களும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

இரு வருடங்கள் ஆன பிறகு, ஒரு நாள் இவர்களுடைய மகள் தொலைபேசியில் பெற்றோரைக் கூப்பிட்டார். அவளுக்கு பெற்றோர் இருக்கும் ஊரில் புதிய வேலை கிடைத்து இருப்பதாகவும், அவள் பெற்றோருடன் நிரந்தரமாகத் தங்குவதற்கு வரப்போவதாகவும் கூறினாள். சில மாதங்கள் போனபிறகு அவள் வீட்டிற்கு வந்தாள். மகள் வந்த பிறகு, பெற்றோர் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். ஆனால், மகளுடைய சிநேகிதர்கள் வரும்போது அதிகம் சத்தம் போடக் கூடாது என்றும், மற்றவர்களுக்குச் சிரமங்கள் கொடுக்கக் கூடாது என்றும் அம்மா கூறினார். இது அவரது மகளுக்கு சிரமம் கொடுத்தது.

© UCLES 2022

அவருடைய மகனும் ஆறுமாதங்கள் கழித்து தனக்கும் வேலை போய்விட்டது என்றும் தானும் வீட்டிற்கு வரப்போவதாகவும் கூறினான். அவனும் வீட்டிற்கு வந்த பின்னர், குடும்பத்திற்கிடையில் சச்சரவுகள் ஏற்படத் தொடங்கின. பெற்றோர் இருவரும் எப்படி சிறிய வீட்டில் இந்த பிரச்சினைகளை சமாளிக்க முடியும் என்று யோசனை செய்தனர். இதற்கு தீர்வு காண்பதற்காக குழந்தைகளுடன் கலந்துரையாடிய பிறகு, அவர்களின் பழைய, பெரிய வீட்டிற்கே போகலாம் என்று தீர்மானம் செய்தார்கள். அவர்கள் மீண்டும் பழைய வீட்டிற்கு வருவதை அறிந்த சில அயலவர்கள், அவர்கள் இலவசமாகக் கொடுத்த சமான்களை அவர்களிடம் திருப்பிக் கொடுத்தார்கள். சில சாமான்களை அவர்கள் புதிதாக வாங்கிக் கொண்டார்கள். மீண்டும் வீடு மாறி வருவது சிரமமாக இருந்த போதிலும், அவர்கள் குடும்பம் மன அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்தார்கள்.

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.